செ.வெ.எண்: 16 நாள்:09.02.2018

# பத்திரிக்கைச் செய்தி

## புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் ரபி பருவத்தில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் வரும் 15 தேதிக்குள் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சு. கணேஷ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**இது குறித்து அவர் அளித்துள்ள செய்திகுறிப்பு:**

நடப்பு 2017-18ஆம் ஆண்டு பயிர் காப்பீடு செய்வதற்கு ரபி பருவ இதர பயிர்களான நெல் -III (நவரை) மக்காச்சோளம், பயறுவகை பயிர்கள், நிலக்கடலை, எள் ஆகிய பயிர்களுக்கு ஒவ்வொரு பயிர்களுக்கும் விவசாயிகள் காப்பீடு செலுத்துவதற்கான காப்பீட்டுத் தவணைத் தொகை (பிரீமியம்) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு ஏக்கருக்கு நவரை நெல் பயிருக்கு ரூ.370, மக்காச்சோளம் ரூ.276, உளுந்து ரூ.195, நிலக்கடலை ரூ.293 எள் ரூ.90 மற்றும் கரும்பு ரூ.650 செலுத்தி காப்பீடு செய்து, இயற்கை இடர்பாடால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு பெறலாம்.

கரும்பு தவிர ஏனைய பயிர்களுக்கு நடப்பு பிப்ரவரி 15ஆம் தேதியும், கரும்பு பயிருக்கு எதிர்வரும் அக்டோபர் 31ஆம் தேதியும் பிரீமியம் தொகையை செலுத்துவதற்கு இறுதி நாளாகும். ஆகவே, விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தினை அணுகி, தங்கள் கிராமம் மேற்கண்ட பயிர்களுக்கு அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதா என்ற விபரம் அறிந்து நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலோ அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பொது சேவை மையங்களிலோ விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ளலாம். பயிர் காப்பீடு செய்வதற்கு நிலம் தொடர்பான ஆவணங்களான சிட்டா, அடங்கல் / கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்படும் பயிர் சாகுபடி சான்று, ஆதார் எண், வங்கி சேமிப்பு கணக்கு எண். மற்றும் ஏதேனும் ஒரு அடையாள அட்டையுடன் காப்பீட்டுத் தொகையினை நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் செலுத்தி பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**